2023 ஏப்ரல் 21] [திரு. தா.மோ. அன்பரசன்]

செய்யப்பட வேண்டுமென்றபட்சத்தில், 5 மடங்கு கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொடர்ந்த வழக்கில், இடைக்கால தடை விதித்து நீதிமன்றம் ஆணை வழங்கியுள்ளது. மேலும், ஒன்றிய அரசின் தாவரப் பாதுகாப்பு இயக்குநரக அலுவலகத்தின் குறிப்பாணை, 12-7-2022-ன்படி, குஜராத் உயர் நீதிமன்ற தீர்ப்பாணை வழங்கப்பட்ட, 28-6-2022 முதல் 5 மடங்கு கூடுதல் கட்டணம் வசூலிக்க வேண்டாமென அறிவுறுத்தியிருக்கிறது. இதன்மூலம் தமிழ்நாடு உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு, தகுந்த நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

(அஏ) கன்னியாகுமரி மாவட்டம், பன்றியைக் கொன்றதாக 3 வழக்கறிஞர்கள் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்றைய தினம் 3 வழக்கறிஞர்கள் தங்களுடைய சொந்த* estate*-க்குச் சென்றபோது, அங்கே இருக்கக்கூடிய தெரியாத நபர் ஒருவர் ஒரு பன்றியைக் கொன்றுவிட்டார். ஆனால், பன்றியைக் கொன்றவரை விட்டுவிட்டு, 3 வழக்கறிஞர்களையும் கைது செய்து,* forest *அலுவலகத்தில் ஒரு நாள் முழுவதும் வைத்திருக்கிறார்கள். எனவே, . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசின் கவனத்திற்கு வந்துவிட்டது.* Arrest *செய்துவிட்டார்கள் என்று சொல்லிவிட்டீர்கள்.*

(அஐ) வீட்டு வசதி வாரிய குடியிருப்புதாரர்களுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன்* K. *அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதி வாரியத்தால் 24,000 வீட்டுமனைகளும், வீடுகளும் ஒதுக்கப்பட்டன. முழுமையாக*

பணம் கட்டிய பின்பும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்பதன்மீது அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 6 மாத காலம், 1 ஆண்டு காலமாக இல்லை, பத்தாண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்பொழுது அதற்கான ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். எனவே, அதனை முழுமையாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.*

(அ௯) திருமங்கலம் தொகுதி, புதிய பேருந்து நிலையம் மற்றும் இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான நில ஒப்படைப்புக்கு அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். தற்போது அது இரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தற்போது இதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

அதேபோல், இரயில்வே மேம்பாலத்திற்கான நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டார்கள். அதுவும் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.